உ

சிவமயம்.


# சிவ சங்கர குரு தாலாட்டு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 MAR 1928
MADRAS

## சிவசங்கர பஞ்சகம்.

திருமருகல்
சிதானந்தன்
இயற்றியது.

ஸ்ரீரங்கம்:
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.
1928.



தமிழ்நாடு ஆவணக் காப்பக நூ
183829

சத்திய ஞானனந்த சங்கரன்றனே போற்று
முத்தமபதும பாதசோங்கியவில்வ ரூபர்
பத்தியால் வித்தையுற்ற பரமனும் த்ரோடகாசா
னுத்தமஹஸ்த் தாமலகருண்மையையுளத்
துள்வைப்பாம்.

உ

சிவமயம்:

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 MAR 1928
MADRAS

ஸ்ரீ கணேசசாரதாசற்குருப்யோநம:

# சிவ சங்கர குரு தாலாட்டு.

திங்களணி வேணியன் சிவ குரு மனையில்
சங்கர குருவாய் வந்த சரிதம்
துங்கமுடன் சொல்லுதற்குமே தாடமறுத்தருளும்
மங்கள மாமுகன் மலரடி முடிக்காம்.

சீராருங்கைலை திருப்பதியைவிட்டிங்கு
பேராருஞ் ஜெகத்குருவாய் பெருமானே வந்தவரோ. 1

மங்கையொரு பாகம்விட்டு மான்மழுவும் கரம்விடுத்து
சங்கரபகவத்பாத ஜகத்குருவாய் வந்தவரோ. 2

வேதநெறி தழைத்தோங்க விண்ணவர்கள் மனங்களிக்க
மாதவத்தோர் மனமகிழமலைநாட்டில் வந்தவரோ. 3

அட்டமங்களமூர்த்த மேயருளாலவதரித்து
சிட்டர் புகழ்சிவமே தேசிகனாய்வந்தவரோ 4

திருமாலும் நான்முகனும் தேடறிய பரசிவமே
திருவளரும் காலடியில் ஜெகத்துய்யவந்தவரோ. 5

சிவகுரு ஆரியாம்பாள் செய்தபெருந்தவத்தால்
பவப்பிணியறுக்கவொரு பண்டிதனாய் வந்தவரோ. 6

எல்லா உலகமும் யின்புற்றிருப்பதற்கு
சொல்லறிய பரம்பொருளை சொல்லுதற்கு வந்தவரோ 7

கல்லாவின் கீழிருந்த கற்பகமே யிவ்வுலகில்
எல்லோரும் ஈடேற வெழிற்குருவாய் வந்தவரோ. 8

எட்டாண்டில் எக்கலையும் இன்பமுடன் தானுணர்ந்து
எட்டாப் பொருளறிய எல்லாந் துறந்தவரோ. 9

குற்றமில்லாக் கோவிந்தாசான் குறிப்பால் பணிபுரிந்து
நற்றவர்கள் புகழ்ந்தேற்றும் நான்மறையினுட்பொரு
ளை. 10

பெற்றபின் கமண்டலத்தில் பெருவெள்ளம் தானடக்கி
கற்றவர்கள் புடைசூழ காசிநகர்சென்றவரோ. 11

கங்கையாடி வலம்புரிந்து கடவுளின் கிருபைபெற்று
அங்கையினெல்லிபோல யருமறையினுட்பொருளை. 12

சுருதிமுடிபாடியம் சூத்திராதி மூன்றற்கும்
பிரியமுடன் செய்தருளி பேதமதங்களைந்தவரோ. 13

அடிபரவும் பத்மபாதர் அனைவருக்குமப்பொருளை
முடிவிலாக்கருணையினால் முத்திநெறி சொன்னவ
ரோ. 14

வாராணசியில்வியாசர்வந்து சங்கைசெய்திடவும்
பூரணமாய்ப்பாடியத்தைப் பொருள்படுத்திச்சொன்ன
வரோ. 15

மண்டனபண்டிதர் மனைக்குள் சென்றருந்தி மறைமுடி
வால்
கண்டித்தவர்மதத்தைக் கதிபெரச்செய்தவரோ. 16

ஆனந்த கிரியன்பால் பணியே புரிந்துவர
தானந்தமில்லாத் தன்னையருட்செய்தவரோ. 17

மத்தனெனயிருந்த மாதவச்சேயைக்கண்டு
அத்தாமலகா யென்றழைத்தவருட்கடலோ. 18

சதுர்வித புருடார்த்தம் ஜகத்தோற்கறிவிக்க
மதிமுகமிலங்க மண்ணிலவதரித்தவரோ. 19

தத்துவபோதாதிதனிதத பலநூல்கள்செய்து
உத்தமஅத்விதம் வோங்கிடச் செய்தவரோ. 20

அந்நூலின் கருத்தெல்லாம் அணுவளவும் பிசகாமல்
யெந்நாவில் யிருந்தருள யின்பஅருள் வேண்டுவனே.21

சுத்தசுயஞ்சோதி சுகபரிபூரணத்தில்
சத்தியொன்றிருந்து ஜகத்காரணமாகும். 22

சத்திதனித்திருக்க ஜகத்காரணமில்லை
ஒத்திரண்டுங்கூடி உபாதானமென்றவரோ. 23

பூவாதியைந்தும் புலப்படும் யிதனிடத்தே
தேவாதி யெழுவகையும் திரிசியமென்றவரோ. 24

அறியாமை வடிவாகும் ஆக்கையே காரணமாம்
கரியாகும் நின்வடிவை கண்டுகொள்ளென்றவரோ. 25

பத்தேழு தத்துவம் பகுப்புடைய சூக்கவுடல்
சத்தாகும் நின்னுன்மாசாக்ஷியென்று சொன்னவரோ. 26

சர்மாதி ஆறுதத்துவம் தூலவுடலன்னமயம்
உருவமிலாநின்னுன்மாவொளிவடிவமென்றவரோ. 27

மூன்றுடலினபிமானி முறையே விசுவாதி
மூன்றவத்தையிவ்வுடலின் முறையென்றுசொன்னவரோ. 28

அன்னாதியைங்கோசமசத்தியமென்றருளி
பின்னமிலா நின்னுன் மாபிரமமென்றுசொன்னவரோ. 29

பிரம்மாதி பிபீலிகாயந்தமாமனைத்துலகும்
பிரம்மமே யென்றருளி பேதங்கெடுத்தவரோ. 30

திரிசியமாமிவ்வுலகம் திருக்கிடத்தில் கற்பிதமே
திருக்காகும் நீயே ஜெகத்சாக்ஷியென்றவரோ. 31

நனவாதியிவ்வுலகம் நாட்டியமென்றருளி
வினவுமிடத்து நீயேநான் வேறில்லையென்றவரோ. 32

கனவுபோலிவ்வுலகம் கண்டவர்க்கே கவலையறும்
தினகரன் றேசுக்கும் தேசுநீ யென்றவரோ. 33

அறிவையறிவதுவேயறிவாகுமென்றருளி
பிறிவிலானீயே பிரமமென்றுசொன்னவரோ. 34

அண்டமெல்லாந்தன்வடிவாய் யறிவாயறிவதுவே
கண்டங்கருத்தசிவன் கருத்தென்றுசொன்னவரோ. 35

ஆணாகிப பெண்ணாகி யலியாயனைத்துலகும்
தானாகிநின்ற தத்துவத்தைச் சொன்னவரோ. 36

கடலாகி மலையாகிக்கண்டபொருளனைத்துமாய்
யுடலாகி யுயிராகி யொருவனே நின்றவரோ. 37

காயாம்பூவண்ணன் கட்டுரைத்தகீதையினால்
மாயாமயக்கறுக்க மண்ணிலவதரித்தவரோ. 38

பரிச்சேதமூன்றுமிலாபரம்பொருளையறிவிக்க
திரிசியமிலர்ச்சிவமே தேகமுடன்வந்தவரோ. 39

பஞ்சபேதங்களிலாபரமார்த்தத்தையுணர்த்த
வஞ்சமென்று நாயேனையாட்கொள்ளவந்தவரோ. 40

முக்திநெறியறியாதமூடரொடுதிரியுமென்னை
சத்தியத்துவிதந்தானுக்கவந்தவரோ. 41

அறிவையர்கள் நிதம்பவாழிதனில்மூழ்குமென்னை
அறிவாகும் வங்கங்கொண்டாண்மை செய்யவந்தவ
ரோ. 42

கருவிழியார் மோகவலை கட்டுண்டநாயேனை
கருமிடற்றண்ணலேகதிசேர்க்கவந்தவரோ. 43

குன்றெனும்மங்கையர்கொங்கையில்மூழ்குமெனது
மன்றில்நடித்தபொருள் மயக்கறுக்கவந்தவரோ. 44

பிரம்மாதிஸ்தம்பமீராய்பின்னுமுள்ளவிடயங்கள்
தூரமில்லாக்காக்கை விட்டைசமமென்று சொன்னவ
ரோ. 45

எங்குமிருந்திலங்கியினித்தபரசிவமே
சங்கரபகவத்பாத சற்குருவாய்வந்தவரோ. 46

நாற்றச்சடலத்தை நாலாளின் பெருஞ்சுமையை
யேற்றுத்திரியுமென்னிளைப்பொழிக்கவந்தவரோ. 47

இன்பமய வென்வடிவை யேகமாயறிந்தவர்க்கே
துன்பமயவன்பிறவி துலையுமென்று சொன்னவரோ. 48

பொன்னிடத்தே பூடணமும் பூவிடத்து கடமுமென
வென்னிடத்தே யிவ்வுலகம் யிரண்டில்லை யென்றவ
ரோ. 49

வானிடத்தே கருமையென வான்முதலாமிவ்வுலகம்
நீனமிலா வென்னிடத்தே திகழுமென்று சொன்னவ்
ரோ. 50

கருத்தாதிற்கட்கமும் கட்டையிடைக்கள்ளனும்
மருவிலாயென்னிடத்தேமண்முதலென்றவரோ. 51

ஆக்கலுங்காத்தலுமனைத்தையுமழித்தலும்
நீக்கமிலாபரசிவத்தின்லீலையென்றுசொன்னவரோ. 52

திருமாலுள்சசிவனுமசிவனிடத்தே திருமாலும்
பொருவிலாயிருவரும் பூரணமென்றவரோ. 53

அத்திமுதலெறும்பீறானவுயிரத்தினைக்கும்
சித்தத்திலூறுவது சிதானந்தமென்றவரோ. 54

ஆதியந்தமில்லா வான்மாவையறிந்தவற்கு
பீதியிலாபிரமமே பின்னமில்லையென்றவரோ. 55

ஆடியில்புரமெனயனைத்துலகும் நம்மிடத்தே
கூடியிலங்குவது குறித்தறியச்சொன்னவரோ. 56

தோற்றவொடுக்கமில் சுத்தப்பிரமத்தில்
தோற்றுவது மொடுங்குவதும் சுத்தப்பொய்யென்றவ
ரோ. 57

எத்தனையோ கோடிஜென்மம் மெடுத்தலுத்தேனு
யேன்
அத்தனையுமறிந்தநீயகற்றுதற்கு வந்தவரோ. 58

ஜலகரையில்த்தருமுதல்த்தலைகீழ் தோற்றுவபோல்
சலனமில் லென்னிடத்தே ஜகத்தோற்றமென்றவ
ரோ. 59

என்னிடத்தே யனைத்தும் மெல்லாத்துள்ளுமென்னை
பின்னமறக்கண்டவர்க்கே பிறப்பறுமென்றவரோ. 60

மனநினைவிலிவ்வுலகம் மாறுபாடாய்த்தோற்றுவது
கனவில் கரியெனக்கண்டறிவாயென்றவரொ 61

மன்னினைவேயுலகாகும் மனமொடுங்கிலுலகில்லை
தினமும் சுழுத்தியினில் தெளிந்தறியச்சொன்னவ
ரோ. 62

போகமொடு புசிப்பனவும் போக்தாவும் பூரணமாம்
யேகமா மான்மாவே யிரண்டில்லையென்றவரோ. 63

ஈரேழு திருபுடியும் யின்பமய வான்மாவில்
மாறுபடத்தோற்றுவது மனவிகற்பமென்றவரோ. 64

காண்பானுங்காட்சியும் கானப்படும்பொருளும
மாண்புடைய வான்மாவில் மணிதக்கோடென்றவ
ரோ. 65

எண்டிசையுங்கீழ்மேலும்மிருக்கும்பலதேவர்களும்
கண்டமிலாப்பிரமமேகண்டவர்க்குமென்றவரோ. 66

தன்னையறியாது தன்னையேதான்தேடல்
யென்னபுதுமையிது மாயை யென்றவரோ. 67

எப்போதும் பிரமாய் யின்பமுடன்தானிருக்க
தப்பிதமாய்த்தேடுவது தாலிகண்டமென்றவரோ. 68

காமாதி யறுவகையைக்கடத்ததபோதனற்கு
தீமையிலாவத்துவிதந் தெளிவிக்கவந்தவரோ. 69

என்னையானறிய எப்படிக்கூடுமென்னில்
பின்னமில்லாத்தசமனைப்போல் பிறித்தறியச்சொன்ன
வரோ. 70

ஒன்பதுபேறை யெண்ணியொருவனுந்தன்னைத்தான்
பின்னமிலா வறியும் பெற்றிபோலென்றவரோ. 71

ஆக்கை மூன்றவத்தை மூன்றபிமானிமூன்றும்
நீக்க மறவறிந்திருக்கும் நீபிரமமென்றவரோ. 72

சிவனே சீவன் சிறிதும்வேறில்லை யென்று
பவமகற்றும் சுருதிமொழிப் பகுந்தறியச்சொன்னவ
ரோ. 73

நான்குமறைமுடிவதனில் நான்குமகா வாக்யமுண்டு
ஆன்மாவே பிரமமென வரையுமென்று சொன்னவ
ரோ. 74

பிரக்ஞானம் பிரம்மமெனும் பேதமிலாவாக்கியத்தால்
பிரக்ஞையே பிரம்மென்று பின்னமறச்சொன்னவ
ரோ. 75

அகம்பிரம்மாஸ் மியெனும பேதமாம் வாக்கியத்தால்
அகமதையகற்றியென்னை அறிவிக்கவந்தவரோ. 76

தத்துவமசிவாக்கியத்தால் தன்னைத்தானறிந்தவர்க்கே
சித்த மயக்கமெல்லாந் தெளியுமென்று சொன்னவ
ரோ. 77

அயமான் மாபிரமமெனு மனன்னியவாக்கியத்தால்
பயமற தன்னைக்கண்டோன் பாக்கியவானென்றவ
ரோ. 78

மூற்றறிவும் மூத்தொழிலும் முன்னிலாயீசனுக்கும்
சிற்றறிவுஞ் சிறுதொழிலும் பின்னிலாசசீவனுக்கும். 79

இரண்டிற்கும் பேதங்களெப்போதுமியல்பாகும்
திரண்டபலவுபாதிநீக்கிற் சீவனேசிவமென்றவரோ. 80

பாகத்தியாகலட்சணையால் பரசீவைக்கியத்தை
யோகமாயறிந்தவர்களினிப்பிறவாரென்றவரோ. 81

சோயம் தேவதத்தனெனுஞ் சொல்விருத்தம் நீங்கில்
காயமுடனொருவனுங்கதைபோலென்றவரோ. 82

கடமடவுபாதிநீங்கிற் ககனமொன்றானதுபோல்
உடலிரண்டும் நீங்கிலான்மாவொருவனே யென்றவ
ரோ. 83

நாரதரோடு சுகர் நல்ல வசிஷ்டர் வால்மிகி
தீராஞ்சீவன் முக்தர் தெரிசனஞ்சிறப்பென்றவரோ. 84

உபேட்சை சந்தோட முள்ளிரக்கம் நேசம்
அபேட்சையாமின்னுன் குமலங்காரமென்றவரோ. 85

கருவாதியறுவிகாரம் காயத்துக்கல்லாது
உருவமிலா நின்வடிவமுதியாது யென்றவரோ. 86

கண்டபலகடஜலத்தில் கதிரவனே தோன்றுவபோல்.
உண்டாகு முடல்தோறு மான்மாவொருவனே யென்
றவரோ. 87

உண்டகுந் துக்காதி யுடக்கன்றி யுணர்வுக்கில்லை
புண்டரீகாக்ஷன் விஜயனுக்குப் புகன்றபொருள்
யென்றவரோ. 88

எங்குநிறைசித்தாகம் மிவ்வுலகமிலங்குவது
பொங்கெழிற்சித்திரங்கள் படவையில் போலென்றவ
ரோ. 89

காரணமானம்மிடத்தே காரியமாமிவ்வுலகம்
ஆரணமுறைப்படியபேதமமென்றவரோ. 90

பிரமத்தையுன்னுகீடம் பிரமரமேயாவதுபோல்
பிரமத்தை தியானிக்கில் பிரமே யென்றவரோ. 91

எப்படிபாவனை யிருகுமோவப்படியாம்
தப்பிதமில் சுருதிமொழி சத்தியமென்றவரோ. 92

நான்முகனை தியானித்த நாலாறு வேதியரும்
நான்முகனைப் பார்ப்படைந்த நலமறியச்சொன்ன
ரோ. 93

இருப்போடிலங்குவது மினிப்பதுவுமான்மாவே
உருப்படாநாமரூபமுண்மையல்லை யென்றவரோ. 94

தமிழ் ... நூலகம்
183879

வேதாந்தவுட்கருத்தை வெளிப்படுத்தநின்னுவில்
போதயன்னுவைவிட்டு புலப்படுத்தவந்தாளே. 95

என்னுடலீசனுடலென்செய்கையீசன்செயல்
புன்செயலொன்றில்லைப்பூரணம் யானென்றவரோ. 96

தேகத்தால் தாசனுகுஞ்சீவனுலம்சனுகும்
யேகமாமானமாவால் யீசன்யானென்றவரோ. 97

இச்சையனிச்சை பரவிச்சையிம்மூன்றும்
அசசாமாக்கைக்கல்லாற் சோதிக்கில்லை யென்றவ
ரோ. 98

எத்தனை யெண்ணினுலு யேதுசெய்தாலுமென்ன
சித்துருவாமெனக்குச்செய்யலேதுயென்றவரோ. 99

வினைக்கீடாமிவ்வுடலம் வினைநீங்கில்விட்டுவிடும்
வினையிலாத்தன்வடிவைவிடமுடியாதென்றவரோ. 100

அத்துவிதமிவ்வுலகிலங்காரம்பெருவதற்கு
சித்தமாய் நான்குமடம் சிருங்கைமுதல் செய்தவ
ரோ. 101

சித்துநான்குசத்துமூன்று சிதானந்த மிருநான்கு
இத்தனையுமுபாதியால் யேகமேயென்றவரோ. 102

பண்ணிறப்பசுக்கள்தோறும் பால் வெண்மையானது
போல்
யெண்ணிலாவாக்கை தொறுமின்பமொன்றேயென்றவ
ரோ. 103

மனுடானந்தமேமலரோன் பெறுவாழ்வும்
அணுவாகுமான்மானந்தவாழியிடையென்றவரோ. 104

சால்வதிபீடமேறி சர்வக்ஞபட்டம்பெற்று
சரசமாய்சண்மதத்தைஸ் தாபணம்செய்தவரோ. 105

சந்திரமௌளியே சதுர்மறையையறிவித்து
தந்திரமாக்கயெல்லாந் தடுப்பதற்குவந்தவரோ. 106

அமரகன் மனைவியர்களணைவருடன் சுகித்திருந்தும்
அமலபாமாம் ஸமழியாயிருந்தவரோ. 107

கண்ணே நவமணியே கற்பகத்தின் பூங்கொத்தே
எண்ணே யெழுத்தே யின்பமுடன்கண்ணுறங்காய். 108

மங்கையுமை பூஜித்தமான்புடைய காஞ்சிவிட்டு
செங்கண் விடையாரூடாய் திருக்கைலை சென்றவ
ரோ. 109

மங்களசுப்பையர் மலரடி யொளியால்
சங்கர குறவன் தாலாட்டு சாற்றினேன்
இங்கிதமாய்ப்படித்தவர்கள் யின்பமுடன் கேட்
டோர்கள்

மங்களமனைத்தும்பெற்றுமனமகிழ்ந்து வாழ்வார்கள்,
ஸ்ரீசிவசங்கரகுருதாலாட்டு முடிந்தது.
ஓம் தத்ஸத்.

இந்த சிவ சங்கர குரு தாலாட்டை பிரதிதினமும் பாராயணம் செய்தால் புத்திர பாக்யம் உண்டாகும்.

சிவமயம்.

# சிவ சங்கர பஞ்சகம்.

விவேகம் விறத்தி சட்சம்பதது விட்டிச்சை சிறவண
மனனநிதித்தியாசனந்திடபோதம்
தவமாவது மனதொருமை மயித்திரிகருணை முதித்தை
யுபேக்ஷை சுபகுணங்கள் நிறைந்து
தவமவமிரண்டுந்தன்னைப் பற்ருது சடமுள்ளவறை
யும் பாக்கி வினைபுசித்து
சிவகனலிலவித்தையுடல் வெண்ணீராக்கி சிறந்த கை
வல்யம் தருவாய் சிவசங்கரனே.

கோசமாங் கோட்டையைக்கடந்து கொதற்கமொடியை
யறுத்து குருபீடங் கண்டு
பாசமாம் பகையைவென்று பற்றற்ற றிடபகொடி
தூக்கி பரசிவைக்ய பாதையைக்கண்டு
தாசர்களாம்காணபடைதுணைகூட்டி சர்வமும் சிவமே
யெனும் ஜெயபேரிகைகொட்டி
வாசனை மூன்றையும் ஞானவாளாலறுத்து வாட்ட
மிலா சுயராச்யம் யெனக்கருளா சிவசங்கரனே.

உத்தமயுபாதிவை ராக்யமாம் உத்தமிகள் யிருமனைவி
களிடைவிடா திருக்கவேண்டும்

சத்திய ஞானனந்த சங்கரனே தானக தனித்தறிய
வேண்டும்தத்துவமசி
உத்தம வரண்மனைக்குள்ளே வோங்கார சிம்மாசன
மேறி வொருமையுடனகம் பிரமாஸ்மி
சத்திய முடிசூட்டி தடையிலா திடஞான சுயராசயம்
யெனக்கருள் சிவசங்கரனே.

சுத்தமாம் துரியநடுமேல்வீடு சென்று சுயஞான நிர்வி
கல்ப புஷ்ப்பணையின் மீது
சித்தசெய சிவஞான சிறந்ததுயில் கொண்டு ஜீவபேதம்
சிறிதுமிலா விழித்து
சத்தியசாந்தமெனுஞ் சந்தணமணிந்து சர்வமும்தானே
யெனும்சந்தோஷ தாரணிந்து
உத்தமசாதுசங்கயுயர்சபைகூட்டி யுண்மையாம்
சுயராசயம் யெனக்கருள் சிவசங்கரனே.

சித்தெது ஜடமெது சிவனெது ஜெகத்தின் காரணமா
மீசனர் யிவ்வுடலெனக்கேன்
முத்தியார்க்குபத்தமெது முழுவுக்கத்துடன் பிரக்
ஞான பிரம்மமெனுஞ் செங்கோல்பிடித்து
சுத்தசத்துவ மந்திரியுடன் யமாத்மா பிரம்பமெனு
மாலோசனைபுரிந்தனவாதம் மோகன் தலைசாய்க்க
யுத்தமயுத்தியெனும் சுயரச்யவிசாரணை வோயாதுபுரிய
வெனக்கருள் சிவசங்கரனே.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
183879